**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064838

1. District : மாவட்டம் தேனி — PS: காவல்நிலையம் ஊதக பிரி — Year: ஆண்டு 2019 — FIR No: மு.த.அ. எண் 23/AC/2019 — Date: நாள் 11.12.2019

2. (i) Act சட்டம்: U/s 7(a) of the Prevention — Sections பிரிவுகள்: -
(ii) Act சட்டம்: of Corruption (Amendment) — Sections பிரிவுகள்: -
(iii) Act சட்டம்: Act 2018 — Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை
1) 27.11.2019. பகல் சுமார் 1200 மணி
2) 6.12.2019 - முற்பகல் சுமார் 02 மணி.
3) 10.12.2019 - மாலை சுமார் 07.30 மணி

Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.12.2019 — Time : நேரம் 09.00hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.12.2019 — Time : நேரம் 09.00hrs.

P. [signature] 11/12/19

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 75 கி.மீ கிழக்கு.

Beat Number : முறைக் காவல் எண் -

(b) Address : முகவரி தேவாசி வட்டார வளர்ச்சி அலுவலகம், சமூக நலத்துறை விரிவாக்க அலுவலர் அறையில்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் வி. கார்த்திக் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. வைரமுத்து.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியர் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

(f) Occupation : தொழில் கணக்காளர் — (g) Address : முகவரி 4/126, செம்புலியர் தெரு, சிறுவாச்சூர், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி. கீதா, விரிவாக்க அலுவலர், சமூகநலத்துறை, தேவாசி வட்டார வளர்ச்சி அலுவலகம், தேனி மாவட்டம் 2) மேற்படி விரிவாக்க அலுவலருக்கு கீழ் பணிபுரியும் இதர பெண் அலுவலர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 18(HCL-12)

9. Particulars of properties stolen / involved.(Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11/12/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

P. [signature] 11/12/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11/12/2019 — 1[illegible].00 hrs.

Name: பெயர் P.தங்கமணி,
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
[illegible]
[illegible]

<u>சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 11.12.2019–ம் தேதி காலை 09.00 மணிக்கு வீ.கார்த்திக், த/பெ வீரமுத்து,4/126, செட்டியார் தெரு, சிறுவாச்சூர், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புதல் வீ.கார்த்திக்,த/பெ வீரமுத்து, 4/126, செட்டியார் தெரு, சிறுவாச்சூர், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள்,லஞ்ச ஒழிப்புத்துறை,சேலம். அய்யா, நான் சிறுவாச்சூர் செட்டியார் தெருவில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். நான் BCA., வரை படித்துள்ளேன். நான் தற்போது சிறுவாச்சூரில் உள்ள சக்தி ஏஜென்சிஸ் என்ற பெட்ரோல் பங்கில் கணக்காளராக வேலை செய்து வருகிறேன். எனது தாயார் திருமதி.லட்சுமி அவர்களின் சித்தப்பா மகன் வெங்கடேஷ் என்பவர் சிறுவாச்சூரில் குடும்பத்துடன் வசித்து விவசாயம் செய்து வருகிறார். அவர் எனக்கு மாமா உறவுமுறை ஆகும். அவருக்கு பிரியா என்ற மகளும், சதீஸ்குமார் என்ற மகனும் உள்ளனர். பிரியா 10 ஆம் வகுப்பு படித்து முடித்துள்ளார். அவர்களது குடும்ப சூழ்நிலை காரணமாக +2 இடைநிறுத்தம் செய்துவிட்டார். சதீஸ்குமார் தற்போது 10ஆம் வகுப்பு படித்து வருகிறான். பிரியாவுக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தை சேர்ந்த திரு.விஷ்ணுகாந்தி என்பவரின் மகன் சரவணன் என்பவருடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, அந்த திருமணம் கடந்த 01.12.2019 ஆம் தேதி சேலம் ஆறகளூரில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை ஸ்ரீ காமநாதீஸ்வரர் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது. எனது மாமா திரு.வெங்கடேஷ் நீரிழிவு நோயால் மிகவும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அதனால் அவரது மகள் பிரியாவின் திருமண வேலைகள் அனைத்தையும் நான்தான் முன்நின்று செய்து திருமணத்தை நடத்தி முடித்தேன். எனது மாமா என்னிடம் நவம்பர் முதல் வாரத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் வெளியில் எங்கும் அலைய முடியவில்லை என்றும் அதனால் தமிழக அரசின் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்குமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். அதனால் நான் சிறுவாச்சூரில் உள்ள விவசாய கூட்டுறவு சங்கத்தில் உள்ள இ–சேவை மையத்தில் எனது மாமா பெயரில் வருமான சான்று மற்றும் அவரது மகள் பிரியா பெயரில் பிறப்பிட சான்று ஆகியவற்றை கேட்டு ஆன்லைன் மூலம் தலா ரூ.60/– செலுத்தி விண்ணப்பித்து பிறப்பிட சான்றிதழ் மற்றும்

வருமான சான்றிதழ் பெற்றேன். பின்னர் நான் பிரியாவின் திருமணத்திற்காக தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ½ பவுன் தங்கம் மற்றும் ரூ.25,000/- நிதியுதவி பெறுவதற்காக 27.11.2019 அன்று காலை சிறுவாச்சூரில் உள்ள விவசாய கூட்டுறவு சங்கத்தில் உள்ள இ–சேவை மையத்தில் ரூ.120/– பதிவு கட்டணமாக செலுத்தி ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்பத்துடன் வருமான சான்று, பிறப்பிட சான்று, மதிப்பெண் சான்று, வகுப்பு சான்று, பள்ளி மாற்று சான்றிதழ், மணமகன் மற்றும் மணமகள் முதல் திருமண சான்று, திருமணப் பத்திரிக்கை, குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், எனது அத்தை விஜயா பெயரில் உள்ள சிறுவாச்சூர் சிண்டிகேட் வங்கி கணக்கின் பாஸ் புத்தக நகல் ஆகியவற்றை கொடுத்தேன். அதை இ–சேவை மையத்தில் ஆன்லைன் மூலம் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்து என்னிடம் திருப்ப கொடுத்துவிட்டார்கள். அந்த விண்ணப்பத்தின் இரண்டு நகல்களை மணமகன் மற்றும் மணமகளின் புகைப்படத்துடன் எனது அத்தையின் புகைப்படத்தையும் இணைத்து 27.11.2019 அன்று பகல் சுமார் 12.00 மணியளவில் எனது மாமா திரு.வெங்கடேசையும் கூட்டிக்கொண்டு தலைவாசல் யூனியன் ஆபீஸில் உள்ள சமூக நல துறையைச் சேர்ந்த கீதா என்ற விரிவாக்க அலுவலரிடம் கொடுத்தோம். அவர் விண்ணப்பத்தை வாங்கிக்கொண்டு வேறொரு பெண் அலுவலருடன் எங்க ஊருக்கு வந்து விசாரிக்க வேண்டும் என்றும், அவ்வாறு விசாரித்து அவரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்து அனுப்ப தனக்கு தனியாக பணம் கொடுக்க வேண்டும் என்று எங்களிடம் சொன்னார். அதற்கு நான் எவ்வளவு ஆகும் என்று கேட்டேன். அதற்கு அவர் மூன்று விரல்களை காட்டி சைகை செய்தார். நான் ரூபாய் முன்னூறா என்று கேட்டேன். அதற்கு அவர் முன்னூறு இல்லை மூவாயிரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நாங்கள் எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னபோது அரசாங்கத்தில் இருந்து பணம் ரூ.25,000/– இனாமாக வருது இல்ல அதுல இருந்து ரூ.3,000/– கூட கொடுக்க முடியாதா என்று கேட்டார். அதற்கு நான் தற்போது அவ்வளவு பணம் எங்களிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் தற்போது எவ்வளவு பணம் உள்ளது என்று கேட்டார். நான் ரூ.200/– வைத்திருப்பதாக சொன்னேன். அதற்கு அவர் அருகில் தனக்கு உதவியாக இருந்த பெண் அலுவலரிடம் ரூ.100/–க்கு கொடிநாள் ரசீது போட்டுக்கொடுக்கும்படி சொன்னார். அந்த உதவி பெண் அலுவலர் என்னிடம் இருந்து

பணம் ரூ.200/– ஐ வாங்கிக்கொண்டு அதில் ரூ.100/–க்கு மட்டும் 26.11.2019 என்று முன் தேதியிட்டு ரசீது ஒன்றை எனது அத்தை திருமதி.விஜயா பெயரில் பூர்த்தி செய்து கொடுத்துவிட்டு மீதி ரூ.100/–ஐ அவரே வைத்துக்கொண்டு பணம் ரூ.3,000/–த்தை கொடுக்கும்படி கேட்டார். நான் தற்போது அவ்வளவு பணம் கொண்டுவரவில்லை என்று சொன்னேன். அதற்கு அந்த உதவி பெண் அலுவலர் அவர்கள், விரிவாக்க அலுவலர் கீதாவிடம் கொடிநாள் ரசீது போட்டுக்கொடுத்த விபரத்தை சொல்லி நான் பணம் ரூ.3,000/–ம் கொடுக்கவில்லை என்று சொன்னார். அதற்கு விரிவாக்க அலுவலர் அந்த உதவி .பெண் அலுவலரிடம் எங்களது விண்ணப்பத்தின் மீது Nil என்று எழுதும்படி சொன்னார். உடனே அந்த உதவி பெண் அலுவலர் எங்களது விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் பென்சிலால் "N" என்று எழுதிவிட்டு எங்களிடம் பணம் கொடுக்காமல் வேலை ஆகாது. பணத்தை கொடுத்தால் தான் ஊருக்கு வந்து விசாரித்துவிட்டு விண்ணப்பத்தை பரிந்துரை செய்யமுடியும் என்று சொன்னதும் நாங்கள் என்ன செய்வதென்று தெரியாமல் அங்கிருந்து வந்துவிட்டோம். அதன்பிறகு எனது மாமாவுக்கு மிகவும் உடல்நிலை சரியில்லாததால் நான் மட்டும் 06.12.2019ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் தலைவாசல் யூனியன் ஆபீசுக்கு சென்று அங்கு இருந்த விரிவாக்க அலுவலர் கீதாவை சந்தித்து எனது விண்ணப்பத்தை பற்றி கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.3,000/– ரெடியா என்று கேட்டார். அதற்கு நான் திருமணத்திற்கு நிறைய செலவாகிவிட்டது அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் இல்லாமல் வேலையாகாது பணத்தை ரெடி செய்துகொண்டு வரும்படி சொன்னதால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு மீண்டும் நேற்று 10.12.2019ம் தேதி செவ்வாய்கிழமை காலை சுமார் 09.45 மணியளவில் தலைவாசல் யூனியன் ஆபீசுக்கு சென்று விரிவாக்க அலுவலரை பார்த்து பிரியாவின் திருமண உதவி கேட்டு கொடுத்த விண்ணப்பத்தை பற்றி கேட்க சென்றேன். அப்போது அவர் அலுவலகத்தில் இல்லை. அங்கிருந்தவர்களிடம் கேட்டபோது அவர்கள் விரிவாக்க அலுவலர் தேர்தல் அலுவலாக வெளியில் செல்வதால் காலையில் அலுவலகம் வர மாட்டார், மாலையில் தான் அலுவலகம் வருவார் என்றும், அவரிடம் போனில் பேசிவிட்டு மாலை 05.00 மணிக்கு வந்து பார்க்கும்படி சொன்னார்கள். ஆனால் நேற்று பகலில் நான் அவசர வேலையாக இருந்ததால் என்னால் மாலை 5.00 மணிக்கு தலைவாசல் யூனியன் ஆபீசுக்கு போகமுடியவில்லை. அதனால் மாலை சுமார் 7.30 மணியளவில் நான்

விரிவாக்க அலுவலரை போனில் தொடர்புகொண்டு பிரியாவின் திருமண உதவி கேட்டு கொடுத்த விண்ணப்பத்தை பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் தான் கேட்ட பணம் ரெடியா என்று கேட்டார். நான் பணம் இன்னும் ரெடிசெய்ய முடியவில்லை என்று சொன்னதும், அவர் என்னிடம் நீங்கள் எத்தனை முறை என்னை வந்து பார்த்தாலும், தான் கேட்ட பணத்தைக் கொடுக்காமல் வேலையாகாது என்றும் பணத்தை ரெடி செய்துகொண்டு நாளை வரும்படியும், தான் தேர்தல் அலுவலில் இருப்பதால் நாளை காலை அலுவலகம் வரமாட்டேன் என்றும் மாலை சுமார் 5.00 மணிக்கு அலுவலகம் வந்துவிடுவதாகவும், எனவே நாளை மாலை 5.00 மணிக்கு தான் கேட்ட பணத்துடன் அலுவலகம் வந்து அலுவலகத்திற்கு வெளியில் இருந்து தனக்கு போன் செய்யும்படியும் தான் வெளியே வந்து பணத்தை வாங்கி கொள்வதாகவும் அதன்பிறகு தான் அனைத்து வேலைகளையும் முடித்து பண உதவி விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார். என் மாமா மகள் பிரியாவின் திருமணத்திற்கு அரசு கொடுக்கும் தாலிக்கு தங்கத்தையும், 25,000/- பணத்தையும் பெற்றுத்தர தலைவாசல் யூனியன் ஆபீஸில் சமூக நலத்துறையில் விரிவாக்க அலுவலராக பணிபுரியும் கீதாவிற்கு 3,000/- லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, மேற்படி விரிவாக்க அலுவலர் கீதா மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 11.12.2019 (Tr.V.Karthik).

Sir, Received the above computer typed complaint on 11.12.2019 at 09.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.22/AC/2019 u/s 7 (a) of Prevention of Corruption (Amendment) Act 2018 at 11.00 hrs today on 11.12.2019 and took up for investigation. Sd xxxx 11.12.2019 (P.THANGAMANI), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.V.Karthik, S/o.Veeramuthu, 4/126, Chettiyar Street, Siruvachur,

Attur Taluk, Salem District is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(P.THANGAMANI),
INSPECTOR OF POLICE
V&AC, SALEM.